சுழலும்; இன்று இல்லாவிட்டால் நாளை, நாளை இல்லாவிட்டால் நாளை மறுநாள், இந்தியாவின் பிரதமர் பீடத்தில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அமரப் போவது உறுதி, உறுதி, உறுதி என்பதைக் கூறி, தமிழ்ப் புத்தாண்டு வணக்கங்களை இதய தெய்வம் அம்மா அவர்களுக்குக் கூறி, புத்தாண்டு வாழ்த்துகளை அமைச்சர் பெருமக்களுக்கும், எதிர்க் கட்சித் தலைவர்கள் மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும் கூறி, மீண்டும் ஒருசேர உங்களைச் சந்திக்க தவம் கிடக்கிறேன் என்று கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை விதி 25 (1) ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும்நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)–ன்படி பேரவை மீண்டும் கூடும்நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும்நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம். நன்றி.

பின்னர், பேரவை பிற்பகல் 2–12 மணிக்கு, மீண்டும் கூடும்நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.